Ours bank with
Bank of Baroda

# மதுரை மணி

Madurai Mani Tamil Evening Daily
தினசரி தமிழ் நாளிதழ் ®
ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
2, Town Hall Road,
Madurai-625 001.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 246 | உள்ளூர் - 03.09.2026 | வியாழக்கிழமை | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com |
| Madurai Edition | *Vol 55 | * Issue 246 | வெளியூர் - 04.09.2026 | வெள்ளிக்கிழமை | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com |

**கிருஷ்ண ஜெயந்தி; 12 ராசிகளுக்கு சிறப்பு பரிகாரங்கள்!**

**13,175 காலிப்பணியிடங்கள்! IBPS–ல்**

**கொளத்தூர்: மு.க.ஸ்டாலின் வழக்கு தள்ளுபடி!**

**அரசியல் துறவறம்: மருத்துவர் ராமதாஸ்!**

## ஸ்ரீராம் கல்லூரிக்கு பிரதமர் மோடி வருகை?

புதுடெல்லி, செப். 03–

தில்லி பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் பிரபல ஸ்ரீராம் வணிகவியல் கல்லூரியின் (எஸ்ஆர்சிசி) நூற்றாண்டு விழா மற்றும் ஆசிரியர் தினமான செப்.5–ஆம் தேதி அக்கல்லூரிக்கு பிரதமர் நரேந்திர மோடி வருகை தர உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.



இளைஞர்களை நோக்கிய தொடர்புகளை அதிகரிக்க மத்திய அரசும் ஆளும் பாஜகவும் பல்வேறு முன்முயற்சிகளை தொடங்கியுள்ள சூழலில், தலைநகரில் உள்ள ஒரு கல்லூரிக்கு பிரதமரின் வருகை குறித்த தகவல் வெளியாகியுள்ளது. முன்னதாக, 2013–ஆம் ஆண்டில் குஜராத் முதல்வராக இருந்தபோது நரேந்திர மோடி இந்தக் கல்லூரிக்கு வருகை தந்திருந்தார்.

இந்தக் கல்லூரியின் 100–ஆவது ஆண்டை முன்னிட்டு, கடந்த ஏப்ரல் மாதத்தில் கல்லூரியின் நிர்வாகக் குழு மற்றும் பேராசிரியர்கள் அடங்கிய குழுவினர் பிரதமர் மோடியை அவரது இல்லத்தில் சந்தித்துப் பேசியிருந்தனர். அந்தச் சந்திப்பின் போது, கல்லூரியின் நூற்றாண்டு விழாவைக் குறிக்கும் சிறப்பு நினைவு அஞ்சல் தலையை பிரதமர் மோடி வெளியிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

## வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் உக்ரைன் பயணம்!

ரஷ்யா, செப். 03–

அண்மைக் காலத்தில் ரஷியா–உக்ரைன் போரில் தாக்குதல்கள் அதிகரித்துள்ள நிலையில் ஜெய்சங்கரின் இந்தப் பயணம் முக்கியத்துவம் பெற்றுள்ளது. செவ்வாய்க்கிழமை கிர்கிஸ்தானில் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு மாநாட்டில் பங்கேற்ற பிரதமர் நரேந்திர மோடி, ரஷிய அதிபருடன் பேச்சுவார்த்தை நடத்தினார்.



அப்போது போர் நிறுத்தம் குறித்து அவரிடம் மோடி வலியுறுத்தினார். இந்நிலையில், ஜெய்சங்கர் தனது உக்ரைன் பயணத்தின்போது அந்நாட்டுத் தலைவர்களிடம் போர் நிறுத்தத்தை வலியுறுத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தப் பயணம் தொடர்பாக வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்தியில், 'செப்டம்பர் 3 முதல் 5–ஆம் தேதி வரை உக்ரைன், போலந்து நாடுகளுக்கு அதிகாரபூர்வ பயணத்தை வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் மேற்கொள்கிறார்.

இந்தப் பயணத்தின்போது உக்ரைன் வெளியுறவு அமைச்சர் அண்ட்ரி சைபிகா, போலந்து துணைப் பிரதமர் ரடோஸ்லாவ் சிகோர்ஸ்கி உள்ளிட்டோரைச் சந்தித்துப் பேசுகிறார்.

இந்தச் சந்திப்புகளின்போது இரு தரப்பு உறவை வலுப்படுத்துவது, பிராந்திய விவகாரங்கள், இரு தரப்பு நலன் சார்ந்த விஷயங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நேபாள வெள்ளம்! பலி 1,252 ஆக உயர்வு! 4,875 பேர் காணவில்லை!

நேபாளம், செப். 03–

நேபாள பெருவெள்ளத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை வியாழக்கிழமை காலை நிலவரப்படி 1,252 ஆக உயர்ந்துள்ளது. இந்தியர்கள் 275 பேர் உள்பட 4,875–க்கும் மேற்பட்டோர் நிலை என்ன என்பது இதுவரை தெரியாத சூழலில், அவர்களைத் தேடும் பணி வியாழக்கிழமை 9–ஆவது நாளாக தொடர்கிறது.



திபெத் – நேபாள எல்லையில் பெரும் பனிப்பாறைச் சரிவால் லெண்டே நதியில் கடந்த ஆகஸ்ட் 26 அன்று ஏற்பட்ட பெருவெள்ளம், நேபாளத்தின் போடே கோஷி நதியில் சீறிப்பாய்ந்தது. சகதியுடன் பல அடி உயரத்துக்கு பெருக்கெடுத்த வெள்ளத்தில் கரையோர கிராமங்கள், சிறு நகரங்கள் அடியோடு அழிந்தன. வீடுகள், கட்டடங்கள், வாகனங்கள், பாலங்கள், சாலைகள், நீர்மின் நிலையங்கள், இதர உள்கட்டமைப்புகள் அடித்துச் செல்லப்பட்டன.

போடே கோஷி நதி வெள்ளம், திரிசூலி, நாராயணி நதிகளிலும் கலந்து பெரும் சேதத்தை விளைவித்தது. ரசுவா, நுவாகோட், சித்வன், நவல்பராசி கிழக்கு, நவல்பராசி மேற்கு, கோர்கா, தனாஹு ஆகிய மாவட்டங்களை புரட்டிப் போட்ட இந்தப் பெருவெள்ளத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 1,252 ஆக உயர்ந்துள்ளது.


மீட்கப்பட்டதில் 77 உடல்கள் மட்டுமே அடையாளம் காணப்பட்டு உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

பெரும்பாலான உடல்கள் அடையாளம் காண முடியாத நிலையில் சிதைந்திருப்பதால், டிஎன்ஏ மாதிரிகளை சேகரித்த பின்னர், சர்வதேச விதிகளின்படி அரசே இறுதிச் சடங்குகளை செய்து வருகின்றது. மறுபுறம், காணாமல் போனவர்களின் உடல்கள் கிடைக்காததால் உறவினர்கள் உருவபொம்மை போன்றவற்றை வைத்து இறுதிச் சடங்குகளை செய்யத் தொடங்கியுள்ளனர்.

## இந்திய விமானப் படையிலிருந்து அபிநந்தன் விலகல்!

புதுடெல்லி, செப். 03–

இந்திய விமானப் படையில் இருந்து விலகிய குரூப் கேப்டன் அபிநந்தன் வர்தமான், தனியார் விமான நிறுவனத்தில் இணைந்துள்ளார்.



ஜம்மு – காஷ்மீரின் புல்வாமா பகுதியில் ஜெய்ஷ்–ஏ–முகமது பயங்கரவாத அமைப்பைச் சேர்ந்த பயங்கரவாதிகள், கடந்த 2019 பிப்ரவரி மாதம் நடத்திய தாக்குதலில் 40 சிஆர்பிஎஃப் படையினர் கொல்லப்பட்டனர். அதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் பாகிஸ்தான் எல்லைக்குள் புகுந்து பாலாகோட் பகுதியில் உள்ள பயங்கரவாத முகாம்கள் மீது இந்திய விமானப்படை விமானங்கள் தாக்குதல் நடத்தின.

அதையடுத்து, இரு நாட்டு போர் விமானங்களுக்கு இடையே தாக்குதல் நடந்தது. அப்போது, பாகிஸ்தானின் எஃப்–16 ரக போர் விமானத்தை இந்திய விமானப்படை விமானி அபிநந்தன் வர்தமான் சுட்டு வீழ்த்தினார். அதே வேளையில், அபிநந்தனின் போர் விமானம் பாகிஸ்தான் தாக்குதலில் வீழ்த்தப்பட்ட நிலையில், அவர் காயத்துடன் பாகிஸ்தான் எல்லைக்குள் விழுந்தார்.

இதனைத் தொடர்ந்து மத்திய அரசு நடத்திய பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து அபிநந்தன் இந்தியாவிடம் ஒப்படைக்கப்பட்டார்.

பாகிஸ்தானின் எஃப்–16 ரக போர் விமானத்தை வீழ்த்தியதற்காக, ராணுவ வீரர்களுக்கு வழங்கப்படும் மூன்றாவது பெரிய விருதான 'வீர் சக்ரா' விருது அபிநந்தனுக்கு வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இந்த நிலையில், தற்போது 43 வயதாகும் அபிநந்தன், இந்திய விமானப் படையிலிருந்து விலகி, ஃப்ளை91 (FLY91) என்ற தனியார் விமான நிறுவனத்தில் சேர்ந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இருப்பினும், அதிகாரப்பூர்வமாக அபிநந்தன் தரப்பிலோ அல்லது ஃப்ளை91 நிறுவனம் தரப்பிலோ எவ்வித அறிவிப்பும் வெளியிடப்படவில்லை.

கடந்த 2024 மார்ச் மாதம் தொடங்கப்பட்ட ஃப்ளை91 நிறுவனம், தற்போது 6 ஏடிஆர் 71–600 ரக விமானங்களுடன் கோவா மற்றும் ஹைதராபாத்தை மையமாகக் கொண்டு செயல்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

## தங்கம் விலை அதிரடியாக உயர்வு!



சென்னை, செப். 03–

தங்கம் விலை அதிரடியாக உயர்ந்துள்ளது. சென்னையில் ஆபரணத் தங்கத்தின் விலை இன்று (செப். 3, வியாழக்கிழமை) சவரனுக்கு ரூ. 2,320 உயர்ந்து ஒரு சவரன் ரூ. 1,13,920 –க்கும் கிராமுக்கு ரூ. 290 உயர்ந்து ஒரு கிராம் ரூ. 14,240 –க்கும் விற்பனையாகிறது.

இன்று வெள்ளி விலையில் மாற்றமில்லை. கிராம் ரூ. 250 –க்கும் கிலோ (கட்டி வெள்ளி) ரூ. 2,50,000 –க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

**முதல்வர் விஜய் அதிரடி அறிவிப்புகள்!**

# ஒலிம்பிக் நகரம்.. சென்னையில் பிரமாண்டம்! ரேஸ் சிட்டி.. தமிழகத்தில் வேகம்!

**புதிய தலைமைச் செயலகம்! ஒரே வளாகத்தில் முழு நிர்வாகம்!!**



சென்னை, செப். 03–

சென்னையில் ரூ.1200 கோடியில் புதிய தலைமை செயலகம் அமைக்கப்படும் என சட்டசபையில் முதல்வர் விஜய் அறிவித்தார்.

சட்டசபையில் 110 விதியின் கீழ் இன்று (செப்., 03) முதல்வர் விஜய் அறிவிப்பு வெளியிட்டு பேசியதாவது:

* தமிழக விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் சென்னையில் உலகத்தரம் வாய்ந்த தமிழ்நாடு ஒலிம்பிக் நகரம் அமைக்கப்படும். உலகத்தரம் வாய்ந்த விளையாட்டு அரங்கங்கள், அதிநவீன விளையாட்டு உபகரணங்கள், உயர்தர செயல்திறன் பயிற்சி மையம் மற்றும் விளையாட்டு மருத்துவ மையங்கள், விளையாட்டு வீரர்கள் மற்றும் பயிற்சியாளர்களுக்கான தங்குமிட வசதிகள் உள்ளிட்ட நவீன உள்கட்டமைப்பு வசதிகள் அமைக்கப்படும்.

* தமிழகத்தை சேர்ந்த விளையாட்டு வீரர்கள் ஒலிம்பிக் போட்டிகள் மற்றும் பிற சர்வதேச விளையாட்டு நிகழ்வுகளில் அதிக எண்ணிக்கையிலான பதக்கங்களை வெல்லவும், ஒலிம்பிக் பதக்கங்களை வெல்லக்கூடிய திறமையான விளையாட்டு வீரர்களை உருவாக்குவதற்கும் உலகத்தரம் வாய்ந்த ஒருங்கிணைந்த விளையாட்டு மையமாகத் திகழும்.

* தமிழகத்தில் ஒரு புதிய மோட்டார் ஸ்போர்ட்ஸ் நகரம் உருவாக்கப்படும். இந்த நகரத்தில் சர்வதேச தரத்திலான மோட்டார் ஸ்போர்ட்ஸ் பந்தயத்தடம், அதற்கான நவீன உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் பயிற்சி வசதிகள் ஏற்படுத்தப்படும். Formula 1, Formula 2, Formula 3, Formula 4 போன்ற சர்வதேச தரத்திலான போட்டிகள் நடத்துவதற்கான கட்டமைப்புகள் உருவாக்கப்படும்.

* இளைஞர்களின் மோட்டார் ஸ்போர்ட்ஸ் திறமைகளைக் கண்டறிந்து, பயிற்சி மற்றும் போட்டி வாய்ப்புகள் வழங்கி, தேசிய மற்றும் சர்வதேச அளவிலான வீரர்கள் உருவாக்கபடுவார்கள்.

* உலகத்தரம் வாய்ந்த மோட்டார் வாகன கார் பந்தய அரங்குகளை அமைப்பதன்மூலம், சுற்றுலா, சிறப்பு வாகன உற்பத்தித் தொழிற்சாலைகள், வேலைவாய்ப்பு, பொருளாதாரம் மேம்பட வாய்ப்புகள் உள்ளது.

* சென்னையில் தற்போதைய தலைமை செயலகம் 400 ஆண்டு பழமையானது. இரு பிரிவுகளாக செயல்படுகிறது. எனவே ஒருங்கிணைந்த புதிய தலைமை செயலக கட்டடம் அவசியம்; ரூ.1200 கோடியில் 20 லட்சம் சதுர அடியில் புதிய தலைமை செயலகம் சென்னையில் கட்டப்படும்.

* தீயணைப்பு வசதிகள், மாற்றுத்திறனாளிகள் சென்றுவர வசதிகள் மற்றும் பசுமைக் கட்டட தரநிலைகளுக்கு உட்பட்டு நவீன நிருவாக வளாகம் உருவாக்கப்படும். போதுமான வாகன நிறுத்துமிடங்கள், மாநாட்டு அரங்குகள், பொதுமக்கள் சேவை மையங்கள் மற்றும் அலுவலர்களுக்கான நவீன வசதிகள் ஏற்படுத்தப்படும். அனைத்து அரசுத் துறைகளையும் ஒரே நிருவாக வளாகத்தில் கொண்டுவந்து ஒருங்கிணைக்கப்படும்.

இவ்வாறு முதல்வர் விஜய் அறிவித்தார்.

## சென்னை ஐகோர்ட்டில் தமிழுக்கு முதன்மை மொழி அந்தஸ்து!

சென்னை, செப். 03–

சென்னை உயர்நீதிமன்றத்தின் முதன்மையான மொழியாக தமிழை அங்கீகரிக்கக் கோரி முதல்வர் விஜய் சட்டசபையில் கொண்டுவந்த தனித்தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.



தமிழ் ஆட்சி, கல்வி மற்றும் மாவட்ட நீதிமன்றங்களில் பயன்படுத்தப்பட்டு வரும் நிலையில், சென்னை உயர்நீதிமன்ற நடவடிக்கைகளிலும் தமிழை முதன்மை மொழியாகப் பயன்படுத்துவது காலத்தின் கட்டாயம் என முதல்வர் விஜய் வலியுறுத்தினார்.

மேலும், உயர்நீதிமன்றத்தின் தீர்ப்புகள் மற்றும் உத்தரவுகளை தமிழிலும் வழங்கும் கட்டமைப்பை உருவாக்க வேண்டும் என்றும், தமிழில் மனுக்கள் மற்றும் ஆவணங்களை தாக்கல் செய்வதற்கான நடைமுறையை ஏற்படுத்த வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்தார். நீதிபதிகள், வழக்கறிஞர்கள் மற்றும் நீதிமன்றப் பணியாளர்களுக்கு சட்டத் தமிழ் மற்றும் மொழிபெயர்ப்பு பயிற்சி வழங்கவும் அவர் வலியுறுத்தினார். "இந்த கோரிக்கை எந்த மொழிக்கும் எதிரானது அல்ல; தமிழ் மொழிக்கான சட்ட அங்கீகாரத்தை கோரும் கோரி க்கை" என முதல்வர் விஜய் தெரிவித்தார்.

தீர்மானத்திற்கு திமுக, அதிமுக, பாமக, தேமுதிக, விசிக, இந்திய கம்யூனிஸ்ட் உள்ளிட்ட கட்சிகள் வரவேற்பு தெரிவித்தன. இதையடுத்து தீர்மானம் சட்டசபையில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

தலையங்கம்
மதுரை மணி
வியாழக்கிழமை 03.09.2026
விசுவாவசு தமிழ் வருடம்
ஆவணி மாதம் 17-ம் தேதி

# 7.8% வளர்ச்சி... தங்கம் ஏன் வேண்டாம்? பொருளாதாரத்தின் மறுபக்கத்தை புரிந்துகொள்ள வேண்டிய நேரம்!



இந்திய பொருளாதாரம் 2026–27 நிதியாண்டின் முதல் காலாண்டில் 7.8 சதவீத வளர்ச்சியை பதிவு செய்திருப்பது நிச்சயமாக பெருமைக்குரிய செய்தி. ஆனால், அதே நேரத்தில் பிரதமர் நரேந்திர மோடி, மக்கள் தங்கம் வாங்குவதை குறைக்க வேண்டும், வெளிநாட்டுப் பயணங்களை கட்டுப்படுத்த வேண்டும், வெளிநாடுகளில் ஆடம்பர திருமணங்களை நடத்துவதை தவிர்க்க வேண்டும் என்று வலியுறுத்துவது ஏன் என்ற கேள்வி எழுவது இயல்பே.

இதன் பின்னணியில் இருப்பது நாட்டின் அந்நியச் செலாவணி நிலை.

பொருளாதாரம் வேகமாக வளரும்போது தொழிற்சாலைகள், கட்டுமானம், தொழில்நுட்பம் உள்ளிட்ட துறைகளுக்கான எரிசக்தி மற்றும் நவீன இயந்திரங்களின் தேவை அதிகரிக்கிறது. இந்தியா இவற்றில் கணிசமான பகுதியை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்கிறது. இதனால் வளர்ச்சி அதிகரிக்கும்போது இறக்குமதிக்கான செலவும் அதிகரிக்கிறது.

இந்தியாவின் ஏற்றுமதி வளர்ந்து வந்தாலும், ஏற்றுமதிக்குத் தேவையான இயந்திரங்கள், தொழில்நுட்பக் கருவிகள், உதிரிபாகங்கள் உள்ளிட்டவற்றையும் நாம் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்ய வேண்டிய நிலை உள்ளது. குறிப்பாக மின்னணு மற்றும் உயர் தொழில்நுட்பத் துறைகளில் இந்தச் சார்பு தொடர்கிறது.

எனவே, 7.8% வளர்ச்சி என்பது பொருளாதாரத்தின் ஒரு முகம் மட்டுமே; அந்நியச் செலாவணியை பாதுகாப்பது அதன் மற்றொரு முக்கிய முகம்.

தங்க இறக்குமதி, வெளிநாட்டுப் பயணம், வெளிநாட்டு ஆடம்பரச் செலவுகள் ஆகியவை நாட்டிலிருந்து அந்நியச் செலாவணி வெளியேறுவதற்கு காரணமாகின்றன. இதனால்தான் மக்களின் தனிப்பட்ட செலவுகளிலும் நாட்டின் பொருளாதார நலனைக் கருத்தில் கொள்ள வேண்டும் என்ற வேண்டுகோள் முன்வைக்கப்படுகிறது.

ஜப்பான், தென் கொரியா, தைவான் போன்ற நாடுகள் வளர்ச்சிப் பாதையில் இதேபோன்ற சவால்களை எதிர்கொண்டு, நீண்டகால தொழில்நுட்பத் தன்னிறைவை வளர்த்துக் கொண்டன.

இந்தியாவும் அந்தப் பாதையில் பயணிக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளது. 7.8% வளர்ச்சியை கொண்டாடுவதோடு நின்றுவிடாமல், இறக்குமதிச் சார்பை குறைத்து ஏற்றுமதியை அதிகரித்து, தொழில்நுட்பத் தன்னிறைவை அடைவதே உண்மையான பொருளாதார வலிமையாகும்.

மக்களிடம் சிக்கனத்தை கேட்பது மட்டும் போதாது. நாட்டின் உற்பத்தித் திறன், தொழில்நுட்பத் தன்னிறைவு, ஏற்றுமதி வலிமை ஆகியவற்றை உயர்த்துவதற்கான நீண்டகால நடவடிக்கைகளும் அதே வேகத்தில் முன்னெடுக்கப்பட வேண்டும்.

## அமெரிக்காவில் பிறக்கும் குழந்தைகளுக்கு பாஸ்போர்ட் பெற புதிய கட்டுப்பாடு!




வாஷிங்டன், செப். 03–

அமெரிக்காவில் பிறக்கும் குழந்தைகளுக்கு பாஸ்போர்ட் வழங்கும்போது, அவர்களின் பெற்றோர் அமெரிக்க குடியுரிமை பெற்றவர்கள் என்பதற்கான நடைமுறையை கொண்டு வர டிரம்ப் நிர்வாகம் திட்டமிட்டுள்ளது.

அமெரிக்க அதிபராக டொனால்டு டிரம்ப் கடந்த ஆண்டு ஜனவரி மாதம் 2–வது முறையாக பதவியேற்றதில் இருந்து, குடியேற்றம் மற்றும் விசா தொடர்பான விதிகளில் பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு வருகின்றன. இந்த நிலையில், அமெரிக்காவில் பிறக்கும் குழந்தைகளுக்கு வழங்கப்படும் பிறப்பு குடியுரிமையை கட்டுப்படுத்தும் நோக்கில் புதிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தற்போதைய நடைமுறையின்படி, அமெரிக்காவில் பிறந்த குழந்தைக்கு பாஸ்போர்ட் பெறும்போது, பெற்றோர் தங்களது உறவை நிரூபிப்பதுடன், புகைப்பட அடையாள அட்டையை சமர்ப்பித்தால் போதுமானது. ஆனால், புதிய திட்டம் அமலுக்கு வந்தால், பெற்றோர் தங்களது அமெரிக்க குடியுரிமைக்கான ஆதாரத்தையும் கட்டாயம் சமர்ப்பிக்க வேண்டிய நிலை ஏற்படும். அமெரிக்க அரசியலமைப்பின் 14–வது சட்டத்திருத்தத்தின்படி, அந்நாட்டில் பிறக்கும் குழந்தைகளுக்கு குடியுரிமை வழங்கப்படுவது அடிப்படை உரிமையாக உள்ளது. இந்த உரிமையை கட்டுப்படுத்தும் வகையில் டிரம்ப் நிர்வாகம் மேற்கொள்ளும் முயற்சிக்கு எதிராக விமர்சனங்கள் எழுந்துள்ளன.

# 3000 பேரை பலி வாங்கிய எபோலா - காங்கோவில் தொடரும் சோகம்!



காங்கோ, செப். 03–

காங்கோவில் எபோலா நோய்த்தொற்றை கட்டுப்படுத்துவதற்கான முயற்சிகளை விட, நோய் பரவும் வேகம் மிக அதிகமாக உள்ளது. சமீபத்திய அரசுத் தரவுகளின்படி, 6,100–க்கும் மேற்பட்ட உறுதிப்படுத்தப்பட்ட பாதிப்புகளில் 3,000–க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

காங்கோ சுகாதார அமைச்சகத்தின் தரவுகளின்படி, மே மாத மத்தியில் இது உலகளாவிய சுகாதார அவசரநிலையாக அறிவிக்கப்பட்டதில் இருந்து, 6,186 உறுதிப்படுத்தப்பட்ட பாதிப்புகளும், 3,007 உயிரிழப்புகளும் பதிவாகியுள்ளன. வரலாற்றிலேயே மிக வேகமாக பரவும் எபோலா பாதிப்பாக இது நீடிக்கிறது.

புனியாவை சேர்ந்த ஜீன்–கிளாட் ஆங்வான்சியா, பாதுகாப்பற்ற சூழல் காரணமாக இட்டுரி மாகாணத்தில் நோய்த்தொற்று தீவிரமாக உள்ள மாம்பாசா பகுதியில் இருந்து வெளியேறியதாக கூறினார். அங்கு சுகாதார பணியாளர்களை அரிதாகவே காண முடிவதாகவும், பாதிக்கப்பட்டவர்களின் உடல்கள் முறையாக கையாளப்படாதது பாதுகாப்பு குறித்த அச்சத்தை ஏற்படுத்துவதாகவும் அவர் தெரிவித்தார்.

நோய்த்தொற்றின் பரவல் வேகம் மக்களின் வாழ்க்கையில் பெரும் நெருக்கடியை ஏற்படுத்தி வருகிறது. புனியாவில் பொது போக்குவரத்து வாகன ஓட்டுநராக பணியாற்றும் பாபி பரகா, தனது வாகனத்தில் ஏற்றி செல்லும்பயணிகளின்எண்ணிக்கையை குறைக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்.

"இந்த நோய் அனைவரையும் ஆபத்தில் ஆழ்த்தியுள்ளது; அன்றாட வாழ்க்கை மிகவும் மந்தமடைந்துள்ளது. நாங்கள் அச்சத்தில் உள்ளோம்," என்று அவர் கூறினார்.

சமீபத்திய வாரங்களில் பாதிப்புகள் அதிகரித்துள்ளன. கடந்த வாரம் வடக்கு கிவு பகுதியில் இரண்டு புதிய சுகாதார மண்டலங்கள் பாதிக்கப்பட்டுள்ளன; இப்பகுதியில் மற்ற பாதிக்கப்பட்ட மாகாணங்களை விட இறப்பு விகிதம் மிக அதிகமாக உள்ளது. இந்த வைரஸ் தற்போது ஆறு மாகாணங்களுக்கு பரவியுள்ளது.

வைரஸை கட்டுப்படுத்துவதற்கான முயற்சிகள் "நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை எட்டவில்லை" என்றும், பல சுகாதார மண்டலங்களில் நோய் வேகமாகப் பரவுவது "நோய்த்தொற்றின் கட்டுப்பாடற்ற பரவலை" குறிக்கிறது என்றும் அமெரிக்காவின் நோய் கட்டுப்பாட்டு மையம் (CDC) வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.

# அரசியல் துறவறம்: மருத்துவர் ராமதாஸ்!




விழுப்புரம், செப். 03 –

விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் வட்டம், கோனேரிக்குப்பத்தில் உள்ள சரஸ்வதி கல்லூரியில் கடந்த ஜீலை 25–ஆம் தேதி நடைபெற்ற தனது பிறந்த நாள் நிகழ்ச்சியில் பங்கேற்ற ராமதாஸ், நான் இன்று முதல் அரசியல் துறவறம் மேற்கொள்கிறேன். கட்சிப் பணிகளை அன்புமணி பார்த்துக்கொள்வார். என்னிடம் இனி யாரும் அரசியல் பேசவேண்டாம் என அறிவித்தார்.

இதைத்தொடர்ந்து, திண்டிவனத்தை அடுத்துள்ள தைலாபுரம் தோட்டத்தில் ராமதாஸ் ஓய்வில் இருந்து வருகிறார். கட்சியின் நிர்வாகிகள், தொண்டர்கள் அவரை சந்தித்து நலம் விசாரித்து வருகின்றனர். அரசியல் குறித்த கோரிக்கையை தொடர்ந்து தைலாபுரம் தோட்டத்தில் வைக்கப்பட்டுள்ள அறிவிப்பு பதாகையில், பா.ம.க. நிறுவனர் மருத்துவர் ச.ராமதாஸ் அரசியல் துறவறம் மேற்கொண்டுள்ளதால், பார்வையா ளர்கள் தயவு செய்து அரசியல் பேசவேண்டாம் என்று தெரிவித்துள்ளார்.

இத்துடன் அந்த பதாகையில், தினந்தோறும் காலை 10 மணி முதல் நண்பகல் 12 மணி வரை பார்வையாளர்கள் சந்திக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த அறிவிப்பால் ராமதாஸின் அரசியல் துறவறம் மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிகிறது.

முன்னதாக பா.ம.க.வில் யாருக்கு அதிகாரம் என்பதில் மருத்துவர் ச.ராமதாஸ்– அன்புமணி ஆகியோரிடையே மோதல் போக்கு உருவானது. இதையடுத்து இருவரும் தனித் தனியாக கட்சிப் பணிகளை மேற்கொண்டு வந்தனர். கட்சியின் நிர்வாகிகளையும் தனித் தனியாக அறிவித்தனர். இதனால் கட்சியினரிடையே பிளவு ஏற்பட்டது. பா.ம.க. நிர்வாகிகள், தொண்டர்கள் அதிருப்திக்குள்ளாகினர்.

இந்நிலையில், 2026 சட்டப்பேரவை தேர்தல் முடிவுக்கு பின்னர் அன்புமணி ராமதாஸ் தனது குடும்பத்தினருடன் தைலாபுரம் தோட்டத்துக்கு வந்து மருத்துவர் ராமதாஸ்– சரஸ்வதி தம்பதியினரிடம் ஆசி பெற்ற நிலையில், தந்தை – மகன் இடையே இருந்து வந்த பிரச்சனை முடிவுக்கு வந்தது.

# மாணவர் சேர்க்கை சரிவு: 70 தனியார் பாலிடெக்னிக்குகள் மூட முடிவு..!!



சென்னை, செப். 03–

தமிழக உயர்கல்வித் துறையின் தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தின் கீழ், 55 அரசு பாலிடெக்னிக் கல்லூரிகளும், 400–க்கும் அதிகமான தனியார் பாலிடெக்னிக் கல்லூரிகளும் செயல்பட்டு வருகின்றன.

கடந்த சில ஆண்டுகளாக டிப்ளமா படிப்பின் மீது மாணவ, மாணவியர்களின் ஆர்வம் குறைந்து வருவதால், பாலிடெக்னிக் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கை கடும் சரிவை சந்தித்து வருகிறது.

நடப்பு கல்வியாண்டில் அரசு பாலிடெக்னிக் கல்லூரிகளில் மொத்தம் உள்ள 22,600 இடங்களில் 12,000 இடங்கள் மட்டுமே நிரம்பியுள்ளன.

தனியார் பாலிடெக்னிக் கல்லூரிகளில் மொத்தம் 1.30 லட்சம் இடங்கள் உள்ள நிலையில், 24,000 இடங்கள் மட்டுமே நிரம்பியுள்ளன. தொடர்ந்து மாணவர் சேர்க்கை சரிந்து வருவதால், நடப்பு கல்வியாண்டில் 70 தனியார் பாலிடெக்னிக் கல்லூரிகள் மாணவர் சேர்க்கையில் பங்கேற்கவில்லை. இக்கல்லூரிகள் தங்களது கல்வி நிறுவனங்களை மூட அனுமதி கோரி, தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்துக்கு கடிதம் எழுதியுள்ளன.

கல்வி நிறுவனங்களை மூடினால், அங்கு பணியாற்றும் விரிவுரையாளர்கள் மற்றும் ஆசிரியர் அல்லாத பணியாளர்களின் நிலை என்ன என்பது குறித்து சம்பந்தப்பட்ட கல்வி நிறுவனங்களிடம் உயர்கல்வித் துறை விளக்கம் கேட்டுள்ளது. மேலும், அவர்களுக்கு மாற்று வேலைவாய்ப்பு ஏற்படுத்துவது தொடர்பாக கல்வி நிறுவனங்கள் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்தும் விளக்கம் கோரப்பட்டுள்ளது.

மேலும், அந்த 70 கல்வி நிறுவனங்களில் பிற வகுப்புகளில் மாணவர்கள் தொடர்ந்து படித்து வந்தால், அவர்களின் கல்வி பாதிக்கப்படாமல் மேற்கொள்ள வேண்டிய மாற்று ஏற்பாடுகள் குறித்தும் கல்வி நிறுவனங்களிடம் உயர்கல்வித் துறை விளக்கம் கேட்டுள்ளது.

# கிருஷ்ண ஜெயந்தி, வார விடுமுறை: 4,070 சிறப்பு பேருந்துகள் இயக்கம்!



சென்னை, செப். 03–

கிருஷ்ண ஜெயந்தி விழா, வார விடுமுறை தினங்களையொட்டி, 4,070 சிறப்பு பேருந்துகள் இயக்கப்ப டும் என அரசு விரைவு போக்குவ ரத்துக் கழகம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து வெளியிட்ட செய்திக்குறிப்பு: கிருஷ்ண ஜெயந்தி, வார விடுமுறை நாள்களையொட்டி, சென்னையில் இருந்தும் பிற மாவட்டங்களில் இருந்தும் ஏராளமானோர் சொந்த ஊர்களுக்குச் செல்ல வாய்ப்புள்ளது.

இதையடுத்து, சென்னை கிளாம்பாக்கம் பேருந்து முனையத்தில் இருந்து பிற மாவட்டங்களுக்கு வியாழக்கிழமை (செப். 3) 910 பேருந்துகளும், வெள்ளிக்கிழமை (செப். 4) 740 பேருந்துகளும், சனிக்கிழமை (செப். 5) 880 பேருந்துகளும் இயக்கப்பட உள்ளன. இதேபோல, சென்னை கோயம்பேட்டில் இருந்து பிற மாவட்டங்கள், பெங்களூரு ஆகிய இடங்களுக்கு வியாழக்கிழமை 210 பேருந்துகளும், வெள்ளி மற்றும் சனிக்கிழமை தலா 115 பேருந்துகளும் இயக்கப்பட உள்ளன. மேலும், பெங்களூரு, திருப்பூர், ஈரோடு, கோவை ஆகிய இடங்களிலிருந்து பல்வேறு பகுதிகளுக்கு 200 சிறப்பு பேருந்துகள், மாதவரம் பேருந்து முனையத்தில் இருந்து வியாழக்கிழமை முதல் சனிக்கிழமை வரை தினமும் 95 சிறப்பு பேருந்துகள் வீதம் இயக்கப்பட உள்ளன.

ஞாயிற்றுக்கிழமை (செப். 6) சொந்த ஊர்களிலிருந்து சென்னை மற்றும் பெங்களூரு திரும்பும் பயணிகளின் வசதி க்காக, பயணிகளின் தேவை க்கேற்ப அனைத்து இடங்களிலிருந்தும் 805 சிறப்புப் பேருந்துகள் இயக்கப்படும். மொத்தமாக இந்த 4 நாள்களில் 4,070 சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட உள்ளதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழகம் முழுவதும் கருத்தரிப்பு மையங்களில் 20 இடங்களில் ஐடி சோதனை!




சென்னை, செப். 03–

சென்னையை தலைமையிடமாக கொண்டு செயல்பட்டு வரும் பிரபல தனியார் கருத்தரிப்பு மையத்திற்கு தமிழகத்தின் பல்வேறு முக்கிய நகரங்களில் கிளைகள் உள்ளன. இந்த நிறுவனம் மற்றும் அதன் துணை நிறுவளங்கள் கடந்த நிதியாண்டில் தங்களின் உண்மையான வருவாயை மறைத்து, கணக்குகளைக் குறைத்துக் காட்டி பெருமளவில் வரி ஏய்ப்பு செய்ததாக வருமான வரித்துறைக்கு புகார்கள் வந்தன. அதன் அடிப்படையில் சென்னை, கோவை, மதுரை உள்ளிட்ட தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் உள்ள 20க்கும் மேற்பட்ட கருத்தரிப்பு மையங்களில் நேற்று காலை முதல் நள்ளிரவு வரை வருமான வரித்துறை அதிகாரிகள் ஒரே நேரத்தில் அதிரடி சோதனை நடத்தினர். குறிப்பாக சென்னை பெரம்பூர் பேப்பர் மில்ஸ் சாலை, அடையாறு, வேளச்சேரி, மதுரவாயல் ஆகிய பகுதிகளில் உள்ள கருத்தரிப்பு மையங்களில் அதிகாரிகள் குழுவினர் தீவிர சோதனை நடத்தினர்.

இந்த சோதனையின் போது வருமானத்தை குறைத்துக் காட்டியதற்கான கணக்கு ஆவணங்கள், கம்ப்யூட்டர், பென் டிரைவ் உள்ளிட்ட முக்கிய டிஜிட்டல் ஆவணங்கள், வங்கி கணக்கு பரிவர்த்தனை புத்தகங்கள் மற்றும் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட நவீன மருத்துவ இயந்திரங்கள் தொடர்பான கொள்முதல் ஆவணங்கள் உள்ளிட்டவற்றை அதிகாரிகள் பறிமுதல் செய்துள்ளனர். இதுகுறித்து வருமான வரித்துறை அதிகாரிகள் கூறுகையில், 'பறிமுதல் செய்யப்பட்ட ஆவணங்கள் அனைத்தும் தீவிர தணிக்கைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன. முழுமையான சோதனை நடவடிக்கைகள் நிறைவடைந்த பிறகே, இந்த கருத்தரிப்பு மையங்கள் எத்தனை கோடி ரூபாய் அளவுக்கு வரி ஏய்ப்பு செய்துள்ளன என்ற விவரங்கள் தெளிவாக தெரியவரும்' என்று தெரிவித்தனர். ஒரே நேரத்தில் முன்னணி கருத்தரிப்பு மையங்களில் நடத்தப்பட்ட இந்த சோதனை பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



# கிருஷ்ண ஜெயந்தி; 12 ராசிகளுக்கு சிறப்பு பரிகாரங்கள்!



2026–ம் ஆண்டு கிருஷ்ண ஜெயந்தி செப்டம்பர் 4–ம் தேதி கொண்டாடப்படுகிறது. இந்த புனித நாளில் பகவான் ஸ்ரீகிருஷ்ணரை பக்தியுடன் வழிபடுவதன் மூலம் துன்பங்கள் நீங்கி, வாழ்க்கையில் மகிழ்ச்சியும் நற்பலன்களும் கிடைக்கும் என ஜோதிட நம்பிக்கைகள் தெரிவிக்கின்றன. குறிப்பாக, ஒவ்வொரு ராசிக்கும் ஏற்ற வகையில் குறிப்பிட்ட நிற ஆடைகள் அணிவது, மலர்கள் மற்றும் நைவேத்தியங்களை சமர்ப்பிப்பது சிறப்பானதாகக் கருதப்படுகிறது.

**மேஷம்:** சிவப்பு அல்லது காவி நிற ஆடை அணிந்து, சிவப்பு சந்தனம், துளசி மாலை சமர்ப்பித்து, கிருஷ்ண மந்திரத்தை 108 முறை ஜபிக்கலாம்.

**ரிஷபம்:** மஞ்சள் நிற ஆடை அணிந்து, வெள்ளை மலர்கள், வெண்ணெய், வெள்ளைக் கற்கண்டு ஆகியவற்றை நைவேத்தியமாக படைக்கலாம்.

**மிதுனம்:** பச்சை நிற ஆடை அணிவதுடன், கிருஷ்ணருக்கு பச்சை ஆடை அணிவித்து, பசுக்களுக்கு பசும்புல் வழங்கலாம்.

**கடகம்:** வெள்ளை அல்லது வெளிர் நீல ஆடை அணிந்து, வெள்ளை மலர்கள், பால் மற்றும் பால் சார்ந்த பொருட்களை படைக்கலாம்.

**சிம்மம்:** மஞ்சள் அல்லது பொன்னிற ஆடை அணிந்து, 'ஓம் நமோ பகவதே வாசுதேவாய' மந்திரத்தை 108 முறை உச்சரிக்கலாம்.

**கன்னி:** வெள்ளை, பச்சை அல்லது பிஸ்தா நிற ஆடை அணிந்து வழிபடுவதுடன், பசுக்களுக்கு உணவு வழங்கலாம்.

**துலாம்:** வெள்ளை அல்லது இளஞ்சிவப்பு ஆடை அணிந்து, வெண்ணெய், கல்கண்டு, ஏலக்காய் ஆகியவற்றை படைக்கலாம்.

**விருச்சிகம்:** சிவப்பு நிற ஆடை அணிந்து, சிவப்பு மலர்கள் மற்றும் மாதுளை, கொய்யா போன்ற பழங்களை சமர்ப்பிக்கலாம்.

**தனுசு:** மஞ்சள் நிற ஆடை அணிந்து, மஞ்சள் நிற இனிப்புகளை படைக்கலாம். ஏழை குழந்தைகளுக்கு புத்தகங்கள் அல்லது ஆடைகள் தானமாக வழங்கலாம்.

**மகரம்:** நீல நிற ஆடை அணிந்து, குழந்தை கிருஷ்ணருக்கு எள் கலந்த நீரால் அபிஷேகம் செய்யலாம்.

**கும்பம்:** வான் நீலம் அல்லது அடர் நீல ஆடை அணிந்து, ஏழைகள் மற்றும் ஆதரவற்றவர்களுக்கு உதவலாம்.

**மீனம்:** மஞ்சள் அல்லது தங்க நிற ஆடை அணிந்து, மஞ்சள் மலர்கள் மற்றும் மஞ்சள் நிற இனிப்புகளை படைத்து வழிபடலாம்.

# அதிமுகவில் இருந்து விலகி தவெகவில் இணைந்த சிங்கை ராமசந்திரனுக்கு அரசுப் பதவி!



சென்னை, செப். 03–

அ.தி.மு.க.வில் மாணவர் அணிச் செயலாளர், தகவல் தொழில் நுட்பப் பிரிவு மாநில செயலாளராக இருந்தவரான சிங்கை ராமச்சந்திரன் கடந்த ஜூன் மாதம் அ.தி.மு.க.வில் இருந்து வெளியேறினார். இதனையடுத்து கடந்த மாதம் 11–ம் தேதி முதல்–அமைச்சர் விஜய்யை நேரில் சந்தித்து, சிங்கை ராமச்சந்திரன் தன்னை த.வெ.க.வில் இணைத்துக் கொண்டார். இந்த நிலையில், தவெகவில் இணைந்த மூன்று வாரங்களில் சிங்கை ராமசந்திரனுக்கு அரசுப் பதவி வழங்கப்பட்டுள்ளது. அதாவது, தமிழ்நாடு ஸ்டார்ட்அப் மற்றும் புத்தாக்க இயக்க (TANSIM) தலைவராக நியமித்து தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது.

# செப் 4-ல் விண்ணில் பாய்கிறது ஜி.எஸ்.எல்.வி. எப்-17 ராக்கெட்!



சென்னை, செப். 03–

இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) தனது மிகவும் லட்சியமிக்க 'ஜிசாட்–1 ஏ' என்று அழைக்கப்பட்ட 'இ.ஓ.எஸ். 5' என்ற பூமி கண்காணிப்பு செயற்கைக்கோளை, 'ஜி.எஸ்.எல்.வி. எப்–17' ராக்கெட்டில் பொருத்தி செப். 04 (வெள்ளிக்கிழமை) அதிகாலை 2.55 மணிக்கு ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரி கோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி ஆய்வு மையத்தில் உள்ள 2–வது ஏவுதளத்தில் இருந்து விண்ணில் ஏவுகிறது

இந்த ராக்கெட்டுக்கான எரிபொருள் நிரப்பும் பணி நிறைவடைந்து. தொடர்ந்து ராக்கெட்டுக்கான இறுதிக்கட்ட பணியான 'கவுண்ட்டவுன்' தொடங்கியது. தொடர்ந்து இஸ்ரோ விஞ்ஞானிகள் ராக்கெட் மற்றும் செயற்கைக்கோளின் செயல்பாடுகளை தீவிரமாக கண்காணித்து வருகின்றனர்.

இந்தியாவின் எல்லைப் பகுதிகளை தொடர்ச்சியாக கண்காணித்து, நாட்டின் பாதுகாப்பு அமைப்புகளுக்குத் தேவையான முக்கியத் தரவுகளை வழங்கும். இது புவிசார் சுற்றுப்பாதையில் இருந்து இந்தியாவைக் கண்காணிக்கும் நாட்டின் முதல் இமே ஜிங் செயற்கைக்கோள் என்று இஸ்ரோ விஞ்ஞானிகள் கூறினர்.




## மழைக்காலத்தில் குழந்தைகளை கொசுக்கடியிலிருந்து காக்க 5 வழிகள்!



மழைக்காலத்தில் தேங்கும் நீர் மற்றும் அதிக ஈரப்பதம் காரணமாக கொசுக்கள் பெருகுகின்றன. இதனால் குழந்தைகளை கொசுக்கடியிலிருந்து பாதுகாக்க சில முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை பின்பற்ற வேண்டும்.

1. தேங்கிய நீரை அகற்றுங்கள்: பூந்தொட்டி தட்டுகள், வாளிகள், ஏர் கூலர்கள் உள்ளிட்ட இடங்களில் தேங்கும் நீரை உடனடியாக அகற்ற வேண்டும்.

2. முழுமையான ஆடை: குழந்தைகள் வெளியில் விளையாடும்போது கைகள், கால்களை மூடும் தளர்வான பருத்தி ஆடைகளை அணிவிக்கலாம்.

3. கொசு வலை பயன்படுத்துங்கள்: குறிப்பாக கைக்குழந்தைகள் மற்றும் சிறிய குழந்தைகள் தூங்கும்போது முறையாக பொருத்தப்பட்ட கொசு வலையை பயன்படுத்துவது பாதுகாப்பான முன்னெச்சரிக்கையாகும்.

4. வீட்டை சுத்தமாக வைத்திருங்கள்: வடிகால்கள், ஜன்னல் ஓரங்கள், பால்கனி மற்றும் ஈரமான பகுதிகளை தொடர்ந்து சுத்தம் செய்ய வேண்டும்.

5. ரசாயனப் பொருட்களில் கவனம்: பூச்சி விரட்டிகள் மற்றும் அத்தியாவசிய எண்ணெய்களை குழந்தைகளிடம் பயன்படுத்தும்போது மிகுந்த கவனம் தேவை. சிறிய குழந்தைகளுக்கு மருத்துவர் ஆலோசனை பெறுவது பாதுகாப்பானது.

குழந்தைக்கு கொசுக்கடிக்குப் பிறகு அதிக வீக்கம், காய்ச்சல், மூச்சுத்திணறல் போன்ற அறிகுறிகள் ஏற்பட்டால் உடனடியாக மருத்துவ ஆலோசனை பெற வேண்டும்.




## இந்த வாரம் தியேட்டர்கள் டல்! காப்பாற்றுமா துல்கர்ஜி.வி.பி.?



ஆகஸ்ட் மாதத்தில் முன்னணி நடிகர்களின் படங்கள் வெளியாகி வசூலில் களைகட்டிய நிலையில், செப்டம்பர் முதல் வாரம் தமிழ் சினிமாவுக்கு சற்றே சோர்வான தொடக்கமாக அமைந்துள்ளது.

பெரிய நட்சத்திரங்களின் படங்கள் இல்லாததால் தியேட்டர்களில் ரசிகர்கள் கூட்டம் குறையும் சூழல் ஏற்பட்டுள்ளது. இந்த வாரம் வெளியாகும் சில படங்களே திரையரங்குகளுக்கு ரசிகர்களை அழைத்து வரும் என எதிர்பார்க்கப்படுகிறது. குறிப்பாக துல்கர் சல்மான் நடிப்பில் வெளியாகும் படம் மற்றும் ஜி.வி. பிரகாஷ் குமார் தொடர்புடைய படங்கள் மீது சினிமா வட்டாரம் கவனம் செலுத்துகிறது. அதேபோல், மமிதா பைஜு நடித்துள்ள படங்களுக்கும் எதிர்பார்ப்பு உள்ளது.

செப்டம்பர் மாதத்தில் கார்த்தியின் 'சர்தார் 2', சூரியின் 'மண்டாடி' உள்ளிட்ட படங்கள் மட்டுமே ரசிகர்களை பெரிய அளவில் திரையரங்குகளுக்கு அழைத்து வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதனால், ஆகஸ்டில் வசூல் வேட்டை நடத்திய கோலிவுட்டுக்கு, செப்டம்பர் தொடக்கம் சோதனைக் காலமாக மாறியுள்ளதா? என்ற கேள்வி எழுந்துள்ளது.

**தியேட்டர்களில் டல் புக்கிங்!**

துல்கர் சல்மான் நடித்த 'ஐ ஆம் கேம்' செப்டம்பர் 3–ம் தேதி வெளியாகும் நிலையில், சென்னையில் இதுவரை சில தியேட்டர்களில் மட்டுமே காட்சிகள் கிடைத்துள்ளன. அதிலும் முன்பதிவு மந்தமாக இருப்பதாக கூறப்படுகிறது.

துல்கரின் முந்தைய படம் எதிர்பார்த்த வெற்றியை பெறாத நிலையில், புதிய படத்துக்கு ரசிகர்களிடம் பெரிய எதிர்பார்ப்பு இல்லை என தெரிகிறது. படம் வெளியான பிறகு நல்ல விமர்சனங்கள் கிடைத்தால் மட்டுமே வசூல் சூடுபிடிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மறுபுறம், ஜி.வி. பிரகாஷ் குமார்பாடு லோஹர் நடித்துள்ள ரொமான்டிக் ஹாரர் படமான 'இம்மார்ட்டல்'இளைஞர்களை தியேட்டருக்கு இழுக்குமா என்ற எதிர்பார்ப்பு உள்ளது.

மொத்தத்தில், செப்டம்பர் முதல் வாரமே தியேட்டர்களில் சற்று மந்தமாக காணப்படுவதால், பெரிய நட்சத்திரப் படங்கள் இல்லாத இந்த மாதம் தமிழ் சினிமாவுக்கு சவாலான காலமாக மாறுமா? என்ற கேள்வி எழுந்துள்ளது.

# துணை அதிபருக்கு நெருங்கிய அமெரிக்க ராணுவ செயலாளர் ராஜினாமா!



அமெரிக்கா, செப். 03–

அமெரிக்க ராணுவ செயலாளர் டான் டிரிஸ்கோல் 18 மாத பணிக்கு பிறகு பதவி விலகியுள்ளார். நேற்று தனது பணியில் கடைசி நாளாக இருக்கும் என அறிவித்திருந்தார்.

இந்த வாரம் தனது ராஜினாமாவை சமர்ப்பிப்பதற்கு முன்பாக அதிபர் டொனால்ட் டிரம்பிடம் ராணுவத்தின் நிலைமை குறித்து அவர் பேசியதாக அசோசியேட்டட் பிரஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. ஈரானுக்கு எதிரான ராணுவ தாக்குதல்களை அமெரிக்கா மீண்டும் தொடங்கியுள்ள சூழலில் இவரது விலகல் நிகழ்ந்துள்ளது.

துணை அதிபர் ஜே.டி. வான்ஸுக்கு நெருக்கமானவராகவும், நாடாளுமன்றத்தில் குடியரசு மற்றும் ஜனநாயக ஆகிய இரு கட்சிகளின் ஆதரவைப் பெற்றவராகவும் கருதப்படுபவர் டிரிஸ்கோல் துணை அதிபர் ஜே.டி. வான்ஸ் நண்பரான டிரிஸ்கோலின் வெளியேற்றத்திற்கான காரணம் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

இருப்பினும், பாதுகாப்பு செயலாளர் பீட் ஹெக்செத் உடனான கருத்து வேறுபாடுகள் தான் இதற்கு காரணம் என கூறப்படுகிறது.

முன்னதாக கடந்த திங்களன்று வெள்ளை மாளிகை இவரது விலகலை உறுதிசெய்தது.

இதன்பிறகு பேசிய டிரிஸ்கோல், டிரம்ப் மற்றும் ஹெக்செத் நிர்வாகத்தின் கீழ் பணியாற்றியது வாழ்நாளின் பெருமை என்று குறிப்பிட்டுள்ளார்.

இவருக்குப் பதிலாக தற்காலிகமா கக்கூட யார் பொறுப்பேற்பார்கள் என்பது அறிவிக்கப்படவில்லை.

அமெரிக்க ராணுவ தலைமையகமான பென்டகனில் அண்மை காலமாக சர்ச்சை நிலவி வருகிறது.

கடந்த ஏப்ரல் மாதம், டிரிஸ்கோலின் ஆதரவாளராகக் கருதப்பட்ட ராணுவத்தின் உயர் அதிகாரி ஜெனரல் ராண்டி ஜார்ஜை பாதுகாப்புச் செயலாளர் ஹெக்செத் பதவியிலிருந்து நீக்கினார்.

அதைத் தொடர்ந்து தற்காலிக தலைமை அதிகாரியாகப் பொறுப்பேற்ற ஜெனரல் கிறிஸ்டோபர் லாநேவ், டிரிஸ்கோல் ஆதரித்த ட்ரோன் நவீனமயமாக்கல் திட்டத்தை சமீபத்தில் ரத்து செய்தார். கடந்த ஆண்டு பொறுப்பேற்றதில் இருந்து, ஜெனரல் ஜார்ஜைத் தவிர 10க்கும் மேற்பட்ட மூத்த ஜெனரல்கள் மற்றும் அட்மிரல்களை எவ்வித விளக்கமும் அளிக்காமல் ஹெக்செத் பதவியிலிருந்து நீக்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

டிரிஸ்கோலின் ராஜினாமாவை தொடர்ந்து ஹெக்செத் மீது குடியரசு மற்றும் ஜனநாயக கட்சி என இரு கட்சிகளில் உள்ளவர்களாலும் விமர்சிக்கப்பட்டு வருகிறார்.

# முதல்வர் விஜய் பேசுவதுபோல 'டீப் ஃபேக்' வீடியோ வெளியிட்டு மோசடி: விசாரணையைத் தொடங்கியது சிபிசிஐடி!



சென்னை, செப். 03–

தமிழக முதல்வராக சி.ஜோசப் விஜய் பொறுப்பேற்ற பின்னர், சமூக ஊடகங்களில் அவர் தொடர்பான 'ரீல்ஸ்'–கள் அதிகம் பகிரப்பட்டு வருகின்றன. முக்கியமாக, வட மாநிலங்களிலும் முதல்வர் ஜோசப் விஜய் தொடர்பான ரீல்ஸ்கள், வீடியோக்கள் வெளியிடப்படுகின்றன. இதைப் பயன்படுத்தி வட மாநிலங்களில் முதல்வர் ஜோசப் விஜய் ஹிந்தி மொழியில் பேசுவதுபோல வீடியோ வெளியிட்டு மோசடி நடைபெறுவதாகக் கூறப்பட்டு வந்தது.

மத்திய பிரதேசத்தில் மோசடி: முக்கியமாக, 'தமிழக முதல்வர் ஜோசப் விஜய் அறக்கட்டளை' என்ற பெயரில் மத்திய பிரதேச மாநிலத்தில் சைபர் மோசடி நடைபெற்று வருகிறது. இதில், முதல்வர் ஜோசப் விஜய் பேசுவதுபோல செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம், குளோனிங் தொழில்நுட்பம் ஆகிய வற்றின் மூலம் உருவாக்கப்பட்ட போலியான 'டீப் ஃபேக்' வீடியோவை வெளியிட்டு, ஒரு கும்பல் மோசடியில் ஈடுபட்டுள்ளது.

மேலும், இந்தக் கும்பல் அந்த அறக்கட்டளை மூலம் கல்விக் கடன், தொழில் கடன், சுய உதவிகளுக்கான கடன் வழங்குவதாகக் கூறி, பல்வேறு வகைகளில் பணத்தைப் பெற்று மோசடி செய்துள்ளது. ரூ.10 லட்சம் வரை கடன் வழங்குவதாகவும், அதற்கு ஜிஎஸ்டி உள்ளிட்ட பல்வேறு கட்டணங்கள் செலுத்த வேண்டும் என்றும் கூறி கைவரிசை காட்டியுள்ளது.

சைபர் குற்றப்பிரிவு வழக்கு: இவ்வாறு அந்தக் கும்பல், பலரிடம் ரூ.1,000 முதல் ரூ.50,000 வசூல் செய்து, பல லட்சம் மோசடி செய்திருப்பதாக மத்திய பிரதேச காவல் துறை தெரிவித்துள்ளது. இந்த மோசடி குறித்து அந்த மாநில காவல் துறை 6 வழக்குகளைப் பதிவு செய்து, விசாரணை மேற்கொண்டுள்ளது. இந்த மோசடி குறித்து துப்பு துலக்குவதற்காக மத்திய பிரதேச காவல்துறை, தமிழக காவல்துறையிடமும் உதவியைக் கோரியுள்ளது. இந்நிலையில், இந்த மோசடி குறித்து தமிழக சிபிசிஐடியின் சைபர் குற்றப்பிரிவு தனியாக ஒரு வழக்கை பதிவு செய்து, விசாரணையை புதன்கிழமை தொடங்கியுள்ளது.

இதுதொடர்பாக சிபிசிஐடி புதன்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு: பொதுமக்களை ஏமாற்றும் நோக்கத்தில் முகநூல் உள்ளிட்ட பல்வேறு சமூக ஊடகத் தளங்களில் முதல்வர் சி.ஜோசப் விஜய் ஹிந்தியில் பேசுவதுபோல செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தில் உருவாக்கப்பட்ட வீடியோவில், பொதுமக்கள் ஏதேனும் பண உதவி தேவைப்பட்டால் ஒரு 'வாட்ஸ்ஆப்' எண்ணைத் தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டு, மோசடி நடந்துள்ளது.

பாகிஸ்தானை சேர்ந்தவர் மீது சந்தேகம்: இந்த வீடியோ குறித்து சிபிசிஐடி–யின் சைபர் குற்றப் பிரிவு வழக்குப் பதிவு செய்து, விசாரணையைத் தொடங்கியுள்ளது. போலியாக உருவாக்கப்பட்ட அந்த வீடியோ குறித்த தகவல்கள், பதிவுகள் ஆகியவை மெட்டா நிறுவனத்திடம் கேட்கப்பட்டுள்ளது. மேலும், அந்த வீடியோவை நீக்குவதற்குரிய நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது.

சைபர் குற்றப்பிரிவின் முதல் கட்ட விசாரணையில், அந்த வீடியோ பாகிஸ்தான் நாட்டைச் சேர்ந்த ஒரு முகநூல் முகவரியில் இருந்து பகிரப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்துள்ளது. இந்த வழக்கில் தொடர்புடையவர்கள் விரைவில் அடையாளம் காணப்பட்டு, கைது செய்யப்படுவார்கள் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கோவிலுக்குள் கர்ப்பிணிகள், முதியோர்களுக்கு மொபைல் போனுக்கு தடையில்லை: அமைச்சர் ரமேஷ்!



சென்னை, செப். 03–

கர்ப்பிணிகள், கை குழந்தை வைத்திருப்போர், முதியோர்கள், மாற்றுத்திறனாளிகள் வரும் போது மொபைல் போன் வாங்கி வைப்பது அவசியம் கிடையாது என அமைச்சர் ரமேஷ் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அமைச்சர் ரமேஷ் கூறியதாவது: கோவிலுக்குள் செல்போன் தடை புதிய நடைமுறை எல்லாம் கிடையாது; 2022ம் ஆண்டு டிசம்பர் மாதம் மதுரை ஐகோர்ட் கிளையில் ஒரு தீர்ப்பு அளிக்கப் பட்டது. தமிழகம் முழுவதும் உள்ள கோவில்கள் லில் செல்போன் தடை நடைமுறைப்படுத்த வேண்டும் என தெரிவிக்கப்பட்டது. அப்போது இருந்து நிறைய கோவில்களில் நடைமுறை படுத்தும் பணி துவங்கியது. மதுரை மீனாட்சி அம்மன் கோவில், திருச்செந்தூர், பழநி, ராமேஸ்வரத்தில் மொபைல் போன் பாதுகாப்பு இடம் அமைத்து ரூ.5 வசூல் செய்வது வந்துவிட்டது.

மக்களை கஷ்டப்படுத்த வேண்டும் என்று எந்தவொரு விஷயத்தையும் நாங்கள் செய்யவில்லை. மிக தெளிவாக எல்லா கோவில்களுக்கும் அறிவுறுத்தி இருக்கிறோம். எந்தவொரு இடத்திலும் மக்கள் நீண்டநேரம் வரிசையில் நிற்கும் சூழல் உருவாகி விட கூடாது என்று சொல்லி இருக்கிறோம். மொபைல் போன் வைப்பதே மிகப்பெரிய பாரமாக மாறி விடக்கூடாது. இதை எல்லாம் பார்த்து விட்டு அதற்கு ஏற்ப முடிவுகள் செய்யுமாறு கோவில்களை அறிவுறுத்தி இருக்கிறோம்.

கர்ப்பிணிகள், கை குழந்தை வைத்திருப்போர், முதியோர்கள், மாற்றுத்திறனாளிகள் வரும் போது மொபைல் போன் வாங்கி வைப்பது அவசியம் கிடையாது. கேமரா இல்லாத சாதாரண மொபைல்போன்களுக்கு தடை இல்லை.

ஊழியர்களின் சம்பளம் உள்ளிட்ட செலவினங்களுக்காகவே கட்டணம் வசூல் செய்யப்படுகிறது. கோவில்களில் செல்போன்களை பாதுகாப்பாக வைப்பதற்கு ரூ.5 கட்டணம் வசூலிப்பது குறித்து தவறான விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன.

அந்த ரூ.5 மூலம் கிடைக்கும் வருவாய் கோவில் பணியாளர்களின் சம்பளம் உள்ளிட்ட பராமரிப்பு செலவுகளுக்கும், கோவில்களுக்கு வருகை தரும் ஏழை, எளிய மக்களின் அன்னதான திட்டத்திற்கும் முழுமையாக பயன்படுத்தப்பட உள்ளது. கோவிலில் கொள்ளையடிப்பது போல பேசுவதா?

கண்மூடித்தனமாக எதிர்க்கக் கூடாது. நாங்கள் மக்களுக்கான அரசு. கோவில் அரசியல் செய்வதற்கான இடம் அல்ல; உண்மையில் பக்தர்களுக்கு சிரமம் இருந்தால் நிச்சயமாக நாங்கள் மாற்று ஏற்பாடு செய்வோம். இவ்வாறு அமைச்சர் ரமேஷ் கூறினார்.

# பாட்டிலுக்கு ரூ.10 வாங்கிய மேலும் 157 பேர் சஸ்பெண்ட்!



சென்னை, செப். 03–

டாஸ்மாக் கடைகளில் கூடுதல் விலை வசூலிப்பது உள்ளிட்ட புகார்களை மதுபிரியர்கள் எளிதாகத் தெரிவிக்கும் வகையில் தமிழக அரசு புதிய புகார் சேவை மையத்தை தொடங்கியது.

இந்த மையத்திற்கு வந்த புகார்களின் அடிப்படையில் நடத்தப்பட்ட விசாரணையில், 67 டாஸ்மாக் ஊழியர்கள் தவறு செய்தது உறுதி செய்யப்பட்டதாக கூறப்படுகிறது.

இதையடுத்து, கூடுதல் விலைக்கு மதுபானங்களை விற்பனை செய்ததாக 67 டாஸ்மாக் ஊழியர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது.

டாஸ்மாக் கடைகளில் பாட்டிலுக்கு கூடுதலாக ரூ.10 வாங்கிய புகாரில் மேலும் 157 டாஸ்மாக் ஊழியர்கள் பணியிலிருந்து நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

அந்த வகையில், கடந்த 2 நாட்களில் மட்டும் மொத்தம் 224 ஊழியர்கள் பணியிலிருந்து நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். அவர்களுக்கு 3 மாதங்கள் பணி வழங்கப்படாது. அரசின் நடவடிக்கை டாஸ்மாக் ஊழியர்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# வேலை வாய்ப்பு

## 13,175 காலிப்பணியிடங்கள்! IBPS–ல்




| விவரம் | தகவல் |
|---|---|
| நிறுவனத்தின் பெயர் | வங்கி பணியாளர் தேர்வு நிறுவனம் (IBPS) |
| வேலைவாய்ப்பு வகை | மத்திய அரசு வேலை |
| பணி நியமனம் | நிரந்தர பணி |
| மொத்த காலிப்பணியிடங்கள் | 13,175 CRP RRBs XV அதிகாரிகள் (ஸ்கேல்–I, II & III) மற்றும் அலுவலக உதவியாளர் (பல்நோக்கு) பணியிடங்கள் |
| பணியிடம் | இந்தியா முழுவதும் |
| விண்ணப்பம் தொடங்கும் தேதி | 01.09.2026 |
| விண்ணப்பிக்க கடைசி தேதி | 21.09.2026 |
| விண்ணப்பிக்கும் முறை | ஆன்லைன் மூலம் |
| அதிகாரப்பூர்வ இணையதளம் | www.ibps.in |

# மேகேதாட்டு திட்டம்: விரைவில் ஒப்புதல் வழங்க மத்திய நீர் ஆணையத்திடம் கர்நாடகம் கோரிக்கை!



புதுடெல்லி, செப். 03–

மேகேதாட்டு திட்டத்துக்கு விரைவாக ஒப்புதல் அளிக்க வேண்டும் என்று மத்திய நீர் ஆணையத் தலைவர் அனுபம்பிரசாத்திடம் கர்நாடக நீர்வளத் துறை அமைச்சர் என். சலுவராயசாமி தலைமையிலான குழு கோரிக்கை விடுத்தது.

இந்தச் சந்திப்பு குறித்து கர்நாடக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியதாவது: கர்நாடக அரசின் லட்சியத் திட்டமான மேகேதாட்டு சமநிலை நீர்த்தேக்க திட்டத்துக்குத் தேவையான சட்டரீதியிலான மற்றும் தொழில்நுட்ப ஒப்புதல்களை விரைவாக வழங்குமாறு வலியுறுத்தி, நீர்வளத் துறை அமைச்சர் என். சலுவராயசாமி தலைமையிலான உயர்நிலைக் குழுவினர், தில்லியில் உள்ள மத்திய நீர் ஆணைய அலுவலகத்தில் அதன் தலைவர் அனுபம் பிரசாதை சந்தித்து ஆலோசனை நடத்தினர்.

மேகேதாட்டு திட்டத்தின் விரிவான திட்ட அறிக்கை குறித்து மத்திய நீர் ஆணையம் முன்னர் தெரிவித்த கருத்துகள் மற்றும் கர்நாடக அரசு ஆணையத்திடம் சமர்ப்பித்த விரிவான இணக்க அறிக்கை ஆகியவை விரிவான விவாதத்துக்காக அமைச்சரால் முன்வைக்கப்பட்டன.

அப்போது, கள நிலவரம் மற்றும் தொழில்நுட்ப விளக்கங்கள் குறித்து ஆணையத் தலைவருக்குத் தெளிவுபடுத்தப்பட்டது. மேலும், இத்திட்டத்தை விரைவாகச் செயல்படுத்தத் தேவையான கூடுதல் தொழில்நுட்ப விளக்கங்களை திறம்பட அளிப்பதன் மூலம் மத்திய நீர் ஆணையம் முழு ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்றும் அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

தீவிர வானிலை மற்றும் போதிய மழையின்மை போன்ற தற்போதைய இக்கட்டான சூழலில் மேகேதாட்டு திட்டத்தின் அவசியத்தை அமைச்சர் வலுவாக வலியுறுத்தினார். மேகேதாட்டு அணை கட்டுவது பெங்களூரு நகரம் உள்ளிட்ட சுற்றியுள்ள மாவட்டங்களின் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்ய தோடு, நீர்மின் உற்பத்தியையும் சாத்தியமாக்கும்.

வறட்சி நிலவும் கடினமான ஆண்டுகளில் தமிழகத்துக்கு நிர்ண யிக்கப்பட்ட நீரைத் தொடர்ந்து திறந்துவிடவும், இரு மாநிலங்களுக்கும் இந்தச் சமநிலை நீர்த்தேக்கம் மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்றும் அவர் விளக்கினார்.

இத்திட்டத்தைச் செயல்படுத்துவதில் மாநில அரசுக்கு உறுதியான அரசியல் விருப்பம் இருப்பதை உறுதி செய்யும், நிர்ண யிக்கப்பட்ட காலக்கெடுக்குள் தொழில்நுட்ப ஆய்வுகளை முடித்து, இத்திட்டத்துக்கு விரைவில் ஒப்புதல் அளிக்குமாறும் மத்திய நீர் ஆணைய தலைவரிடம் அந்த குழு வலியுறுத்தியது என செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டது.





இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882

மதுரை to சென்னை
ரெகுலர் சர்வீஸ்
பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது

சென்னை
Ph: 98659 88881



## இன்றைய கார்ட்டூன்




## எதிரி வான்வெளிக்குள் நுழையாமலே தாக்குதல்! இந்தியாவின் 'ககன்தக்-243' வெற்றி!

புதுடில்லி, செப். 03–

நீண்ட தொலைவில் உள்ள இலக்குகளை துல்லியமாகத் தாக்கும் வகையில் உள்நாட்டில் உருவாக்கப்பட்ட 'ககன்தக்–243' சறுக்கு குண்டை இந்திய விமானப்படை வெற்றிகரமாகச் சோதனை செய்துள்ளது. ஜே.எஸ்.ஆர். டைனமிக்ஸ் நிறுவனம் உருவாக்கிய இந்த குண்டு, விமானத்தில் இருந்து ஏவப்பட்ட பிறகு காற்றின் இயக்கத்தைப் பயன்படுத்தி இலக்கை நோக்கி பயணிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. சுமார் 12 கி.மீ. உயரத்தில்




இருந்து ஏவும்போது 144 முதல் 180 கி.மீ. தொலைவில் உள்ள இலக்குகளை தாக்கும் திறன் கொண்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் எதிரி நாட்டின் வான்வெளிக்குள் விமானங்கள் நுழையாமலேயே தொலைதூர இலக்குகளை தாக்கும் திறன் இந்தியாவுக்கு கிடைக்கிறது. இந்த சோதனை வெற்றி, இந்தியாவின் உள்நாட்டு பாதுகாப்பு மற்றும் ராணுவத் தளவாட உற்பத்தி திறனுக்கு முக்கிய முன்னேற்றமாக பார்க்கப்படுகிறது. சோதனை நடைபெற்ற இடம் குறித்த தகவல்கள் அதிகாரப்பூர்வமாக வெளியிடப்படவில்லை.

## ரயில்வே அப்ரன்டிஸ் நியமன தேர்வு அறிக்கையில் விதிமீறல்: தமிழக இளைஞர்கள் பாதிக்கப்படும் அபாயம்!

சென்னை, செப். 03–

தெற்கு ரயில்வேயில் தமிழக பகுதியில் 6,171 அப்ரன்டிஸ் பணியிடங்களை நிரப்புவதற்கான தேர்வு அறிக்கை, வழிகாட்டு விதிமுறைகளைப் பின்பற்றாமல் வெளியிடப்பட்டுள்ளதால், தமிழக இளைஞர்கள் பாதிப்புக்கு உள்ளாகும் நிலை ஏற்பட்டுள்ளது.




ரயில்வேயில் தொழில் பழகுநர் (அப்ரன்டிஸ்) தொழிலாளர்கள், ரயில்வேயில் உள்ள காலியிடங்களில் 20 சதவீதம் இடஒதுக்கீட்டு அடிப்படையில் நிரப்பப்படுவார்கள். இவர்கள், ரயில்வேயில் சீனியர் ஊழியர்கள் மற்றும் பொறியாளர்களின் மேற்பார்வையில், வேலைகளைக் கற்றுக்கொள்வார்கள். இதற்காக மாதந்தோறும் ரூ.9,600 ஊதியம் வழங்கப்படுகிறது. இதற்கிடையே, தெற்கு ரயில்வேயில் சென்னை, மதுரை, திருச்சி பொன்மலை மத்திய பணிமனை, சேலம், பெரம்பூர் கேரஜ் மற்றும் வேகன் ஒர்க்ஸ், பெரம்பூர் லோகோ ஒர்க்ஸ், கோவை, அரக்கோணம் பொறியியல் பணிமனை, போத்தனூர் சிக்னல் மற்றும் தொலைத்தொடர்பு பணிமனை உள்ளிட தமிழகப் பகுதிகளில் 6,171 அப்ரன்டிஸ் பணியிடங்கள் நிரப்பப்பட உள்ளன.

இதற்கு தகுதியானவர்கள் ஆன்லைனில் ஆக.28 முதல் செப்.27–க்குள் விண்ணப்பிக்கலாம் என்று தெற்கு ரயில்வே சுற்றறிக்கையை வெளியிட்டுள்ளது. அதேநேரம் இந்த அறிவிப்பில், அப்ரன்டிஸ் தேர்வு வழிகாட்டு விதிமுறையின்கீழ், வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்திருக்க வேண்டும் என்று குறிப்பிடப்படாமல் உள்ளது.

அதாவது, 2019–ம் ஆண்டு முதல் 2026–ம் ஆண்டு வரை தமிழக வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்திருக்க வேண்டும் என்ற ஷரத்து நீக்கப்பட்டுள்ளது. மேலும், கர்நாடகாவின் தட்சிண கன்னடா பகுதி, ஆந்திராவின் நெல்லூர், சித்தூர் பகுதி மற்றும் கேரளாவில் இருப்பவர்களும், அந்தமான் நிக்கோபார், லட்சத்தீவு போன்ற பிற மாநிலங்களில் இருப்பவர்களும் விண்ணப்பிக்கலாம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த புதிய அறிவிப்பால் தென்னிந்திய மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் திருச்சி பொன்மலை, பெரம்பூரில் உள்ள ரயில்வே பணிமனைக்கு அப்ரன்டிஸ் பணிக்கு விண்ணப்பிக்க முடியும். இதனால், தமிழக இளைஞர்களின் வேலைவாய்ப்புகள் பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

## தீர்மானம் எங்கள் குழந்தை... இது யாருடைய குழந்தையும் கிடையாது: சட்டசபையில் காரசார விவாதம்!

சென்னை, செப். 03–

சட்டசபையில் முதலமைச்சர் விஜய் கொண்டு வந்த தனித்தீர்மா னத்தின் மீது காரசார விவாதம் நடைபெற்றது. தமிழ்நாடு சட்டசபையில் இன்றைய நிகழ்வில் முதலில் வினாக்கள்–விடை நேரம் நடைபெற்றது. இதனை தொடர்ந்து 110 விதியின் கீழ் முதலமைச்சர் விஜய் 3 முக்கிய அறிவிப்புகளை வெளியிட்டார்.



இதையடுத்து சென்னை உயர்நீதிமன்றத்தில் தமிழை முதன்மை மொழியாக்கக் கோரி தனித்தீர்மானத்தை கொண்டு வந்து முதலமைச்சர் விஜய் பேசினார். இதனை தொடர்ந்து தனித்தீர்மானத்தின் மீது உறுப்பினர்கள் விவாதம் நடைபெற்றது. முதலில் தனி தீர்மானத்தின் மீது திமுக எம்எல்ஏ ரகுபதி பேசியதாவது:–

- தமிழ் வழக்காடு மொழி என்பதற்கு பிள்ளையார் சுழி போட்டவர் கருணாநிதி.
- தமிழுக்கு செம்மொழி அந்தஸ்தை பெற்றுத் தந்தவர் கருணாநிதி.
- சட்ட சொற்களஞ்சியம் இல்லாத காரணத்தால் 2006–ல் தீர்மானத்தை ஏற்க மறுக்கப்பட்டது.
- சென்னையில் உச்சநீதிமன்றக் கிளை வேண்டும் என முதலில் கேட்டவர் ஸ்டாலின்.
- 2022–ல் பிரதமரிடம் நேரடியாக தைரியமாக குரல் எழுப்பியர் ஸ்டாலின்.
- உயர்நீதிமன்றத்தில் தமிழை வழக்காடு மொழியாக்க வேண்டும் என கேட்டார் ஸ்டாலின் என்றார்.

அப்போது குறுக்கிட்ட சபாநாயகர் ஜே.சி.டி.பிரபாகர், தீர்மானம் குறித்து சுருக்கமாக சொல்லும்படி கேட்டார்.

இதையடுத்து பேசிய ரகுபதி,

- இந்த தீர்மானம் எங்கள் குழந்தை, இதை வரவேற்கிறோம்.
- மக்கள் நேரலையில் பார்த்துக்கொண்டிருப்பதால் வரலாறு முக்கியம்.
- ஆங்கிலத்திற்கு பிறகே தமிழ் என்று தான் திமுக ஆட்சியில் தீர்மானம் கொண்டு வரப்பட்டது.
- சட்ட சொற்களஞ்சி யங்களை உருவாக்கினால் உச்சநீதி மன்றம் மறுக்காது என்றார்.

அமைச்சர் நிர்மல் குமார் பேசுகையில், கோரிக்கை விடுப்பது எல்லாம் வரலாறு ஆகாது. எப்போது செயல்வடிவத்திற்க வருதோ யார் செயல்படுத்துகிறாரோ அதுதான் வரலாறு. இதுவரை ஆயிரம் கோரிக்கைகள் வந்து இருக்கலாம். இது யாருடைய குழந்தையும் கிடையாது என்றார். இவ்வாறு முதலமைச்சர் விஜய் கொண்டு வந்த தனித்தீர்மானம் மீது விவாதம் நடைபெற்றது.

## 'ஆபரேஷன் சிந்தூர்' நாயகனுக்கு முக்கிய பொறுப்பு!

புதுடில்லி, செப். 03–

ஓய்வுபெற்ற ஏர் மார்ஷல் ஜிதேந்திர மிஸ்ரா, அயோத்தி ஸ்ரீ ராம் ஜன்மபூமி தீர்த்த க்ஷேத்ரா அறக்கட்டளையின் முதல் தலைமை நிர்வாக அதிகாரியாக (CEO) நியமிக்கப்பட்டுள்ளார்.




இந்திய விமானப்படையில் 38 ஆண்டுகளுக்கும் மேலாக பணியாற்றிய அவர், கடந்த ஏப்ரல் 30–ல் ஓய்வு பெற்றார். 'ஆபரேஷன் சிந்தூர்' நடவடிக்கையில் முக்கிய பங்காற்றியதுடன், சர்வோத்தம் யுத் சேவா பதக்கம், அதி விசிஷ்ட சேவா பதக்கம் உள்ளிட்ட விருதுகளையும் பெற்றுள்ளார்.

அறக்கட்டளையின் கோயில் நிர்வாகம், பக்தர்களுக்கான வசதிகள், நிதி மற்றும் பாதுகாப்பு மேலாண்மை, பணியாளர் ஒருங்கிணைப்பு உள்ளிட்ட முக்கிய பணிகளை அவர் கவனிப்பார்.

5,585 விண்ணப்பதாரர்களில் இருந்து AI அடிப்படையிலான பரிசீலனை மற்றும் நேர்காணல் மூலம் இறுதியாக 3 பேர் தேர்வு செய்யப்பட்டு, அவர்களில் ஜிதேந்திர மிஸ்ரா CEO–வாக தேர்வு செய்யப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது.

## தமிழகம் முழுவதும் ரேஷன் கடைகளில் வெங்காயம் விற்பனை தொடக்கம்!

சென்னை, செப். 03–

தமிழகம் முழுவதும் ரேஷன் கடைகளில் ஒரு கிலோ வெங்காயத்தை ரூ.35–க்கு விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



சமையலில் அத்தியாவசியமாக பயன்படுத்தப்படும் வெங்காயத்தின் விலை கடந்த சில வாரங்களாக தொடர்ந்து அதிகரித்து வருகிறது. வரத்து குறைந்ததன் காரணமாக சென்னை கோயம்பேடு காய்கறி சந்தையில் ஒரு கிலோ பெரிய வெங்காயம் ரூ.60 முதல் ரூ.70 வரை விற்பனை செய்யப்படுகிறது. சில்லரை கடைகளில் அதன் விலை ரூ.80–ஐ கடந்துள்ளது. வெங்காய விலை உயர்வால் பொதுமக்கள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், விலையை கட்டுப்படுத்த மத்திய அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இதன் ஒரு பகுதியாக மராட்டிய மாநிலம் நாசிக்கில் உள்ள கிடங்குகளில் இருந்து வெங்காயம் டன் கணக்கில் பல்வேறு மாநிலங்களுக்கு அனுப்பப்பட்டு வருகிறது. இதன்மூலம் ஒரு கிலோ வெங்காயத்தை ரூ.35–க்கு விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வெளிச்சந்தையில் வெங்காயத்தின் விலை கிடுகிடுவென உயர்ந்ததை அடுத்து, ஏழை, எளிய நடுத்தர மக்கள் பயன்பெறும் வகையில் நியாயவிலைக் கடைகள் மூலம் குறைந்த விலையில் வெங்காயம் விற்பனை செய்யும் திட்டத்தை தமிழக அரசு நடைமுறைப்படுத்தியுள்ளது. இதன் ஒரு பகுதியாக, சென்னை ஆழ்வார்பேட்டையில் உள்ள நியாயவிலைக் கடையில் குடும்ப அட்டைதாரர்களுக்குக் குறைந்த விலையில் வெங்காயம் விற்பனை செய்யும் திட்டத்தை அமைச்சர்கள் வெங்கடரமணன் மற்றும் காந்திராஜ் அதிகாரப்பூர்வமாகத் தொடங்கி வைத்தனர்.

## வீட்டில் வெளிநாட்டு செல்லப்பிராணிகளா? இனி தப்ப முடியாது!



சென்னை, செப். 03–

வீட்டில் வளர்க்கப்படும் வெளிநாட்டு விலங்குகள், அரிய பறவைகள் அனைத்தையும் 'பரிவேஷ் 2.0' தளத்தில் பதிவு செய்வது கட்டாயம். மக்காவ், பஞ்சவர்ணக் கிளி, லீமர்ஸ் உள்ளிட்டவற்றை வளர்ப்பவர்கள் உடனடியாக விவரங்களைப் பதிவு செய்ய வேண்டும்.

புதிதாக இறக்குமதி செய்ய முதன்மை வனவிலங்கு காப்பாளரின் NOC பெற வேண்டும். விதிமீறினால் விலங்குகள் பறிமுதல் + கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

## தீபாவளி ரயில் டிக்கெட் புக்கிங் ரெடி! செப். 6 முதல் முன்பதிவு!




சென்னை, செப். 03–

நவ. 8 தீபாவளியை முன்னிட்டு சொந்த ஊர் செல்லும் பயணிகளுக்கான ரயில் டிக்கெட் முன்பதிவு செப். 6–ல் தொடக்கம்.

60 நாட்களுக்கு முன்பே முன்பதிவு செய்யும் நடைமுறை உள்ளதால், கூட்ட நெரிசலைத் தவிர்க்க உடனே டிக்கெட் பதிவு செய்யுமாறு தெற்கு ரயில்வே அறிவுறுத்தியுள்ளது.

## கொளத்தூர்: மு.க.ஸ்டாலின் வழக்கு தள்ளுபடி!

சென்னை, செப். 03–

தமிழ்நாடு சட்டசபைத் தேர்தலில் சென்னை கொளத்தூர் தொகுதியில் தி.மு.க., தலைவரும், முன்னாள் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் போட்டியிட்டு தோல்வி அடைந்தார். இந்த தொகுதியில் த.வெ.க., சார்பில் வி.எஸ்.பாபு போட்டியிட்டு வெற்றிப்பெற்றார்.



பொதுவாக தேர்தலில் வெற்றிப் பெற்றவர்களை எதிர்த்து தேர்தல் வழக்கு, தேர்தல் முடிவு வெளியாகி 45 நாட்களுக்குள் தாக்கல் செய்யவேண்டும். ஆனால், வி.எஸ்.பாபு வெற்றியை எதிர்த்து மு.க.ஸ்டாலின் 45 நாட்களுக்குள் தேர்தல் வழக்கு தொடரவில்லை.

இந்தநிலையில், கொளத்தூர் தொகுதியில் பயன்படுத்தப்பட்ட வாக்கு எந்திரங்களில் முறைகேடு நடந்திருப்பது தெரியவந்தது. இதையடுத்து, வி.எஸ். பாபு வெற்றியை எதிர்த்து சென்னை ஐகோர்ட்டில் தேர்தல் வழக்கை மு.க.ஸ்டாலின் தொடர்ந்தார். 45 நாட்களுக்குள் வழக்கு தாக்கல் செய்யாததற்கு விலக்கு அளிக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்திருந்தார்.

இந்த வழக்கை ஐகோர்ட் தலைமை நீதிபதி எஸ்.ஏ.தர்மாதிகாரி, நீதிபதி ஜி.அருள்முருகன் விசாரித்து தீர்ப்புக்காக தள்ளிவைத்தனர்.

இந்தநிலையில், இந்த வழக்கின் தீர்ப்பை இன்று நீதிபதிகள் பிறப்பித்துள்ளனர். நீதிபதிகள் பிறப்பித்த உத்தரவில், த.வெ.க. வேட்பாளர் வி.எஸ்.பாபு வெற்றி செல்லாது என அறிவிக்கக்கோரி மு.க.ஸ்டாலின் தொடர்ந்த வழக்கு விசாரணைக்கு உகந்தது இல்லை என கூறி வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளனர்.

## திருப்பூரில் மிலாடி நபி கொண்டாட்டம்!



திருப்பூர், செப். 03–

இஸ்லாமியர்களின் இறைத்தூதரான நபிகள் நாயகத்தின் பிறந்த நாளை இஸ்லாமியர்கள் வெகு விமர்சையாக கொண்டாடி வருகின்றனர். அதன் ஒரு பகுதியாக திருப்பூர் கல்லூரி சாலையில் உள்ள குலாம் காதர் கார்டன் மீலாது கமிட்டி சார்பில் சமூக நல்லிணக்க அசைவ விருந்து வழங்கும் நிகழ்ச்சி குலாம் காதர் கார்டன் மிலாது கமிட்டி தலைவர். குலாம் காதர் யாசர் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் மக்கள் ஒற்றுமையுடன் வாழ வேண்டியும் சாதி மத பேதமின்றி சமத்துவமாக வாழவேண்டியும் சிறப்பு பிரார்த்தனை செய்யப்பட்டது. தொடர்ந்து சமத்துவத்தை பேணும் வகையில் ஊர் பொதுமக்களை ஒன்று திரட்டி 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு அறுசுவை அசைவ விருந்து வழங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் குலாம் காதர் கார்டன் மிலாது கமிட்டி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## பக்தர்களின் எண்ணிக்கையை குறைக்கவே செல்போனுக்கு தடை?




சென்னை, செப். 03–

கோவில்களில் செல்போனுக்கு தடை தொடர்பாக பரவும் தவறான தகவல் குறித்து தகவல் நம்பகத்தன்மை பிரிவு விளக்கம் கொடுத்துள்ளது. இது தொடர்பாக வெளியாக செய்திக் குறிப்பில் தெரிவித்திருப்பதாவது;–

"கோவிலுக்கு வரும் பக்தர்களின் எண்ணிக்கையை குறைக்க மட்டுமே செல்போன் தடை விதிக்கப்பட்டுள்ளது" என்று இயக்குநர் மோகன் ஜி தெரிவித்துள்ளார்.

மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை 2022–ஆம் ஆண்டு அளித்த தீர்ப்பின்படி, கோவில்களின் கண்ணியம் மற்றும் புனிதத்தன்மையை பேணும் வகையில், தமிழகத்தில் உள்ள அனைத்து கோவில்களிலும் செல்போன் பயன்பாட்டை தடுக்க வேண்டும், செல்போன்களுக்கான பாதுகாப்பு மையங்களை (Safety Deposit Counters ) அமைக்க வேண்டும் என்று இந்து சமய அறநிலையத்துறைக்கு உத்தரவிட்டுள்ளது. நீதிமன்ற உத்தரவின்படி, முதற்கட்டமாக 52 முதுநிலைத் திருக்கோயில்களில் மட்டும் செல்போன்களை எடுத்துச் செல்வதற்கான தடை செயல்படுத்தப்பட்டுள்ளது.

## வாக்காளர் பட்டியலில் இருந்து ராகவ் சத்தா பெயர் நீக்கப்பட்டதால் சர்ச்சை!

பஞ்சாப், செப். 03–

பஞ்சாபின் வரைவு வாக்காளர் பட்டியலிலிருந்து ராகவ் சத்தாவின் பெயர் நீக்கப்பட்டுள்ள சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. மேலும், அவர் 'நிரந்தரமாக வேறு இடத்துக்கு மாறிவிட்டார்' என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தலைநகர் தில்லி, ஒடிசா, மிசோரம், சிக்கிம், மணிப்பூர், உத்தரகண்ட், ஆந்திரப் பிரதேசம், அருணாச்சலப் பிரதேசம், ஹரியாணா, சண்டீகர், தெலங்கானா, பஞ்சாப், கர்நாடகம், மேகாலயம், மகாராஷ்டிரம், ஜார்க்கண்ட், நாகாலாந்து, திரிபுரா, தாத்ரா மற்றும் நகர் ஹவேலி, டையூ மற்றும் டாமன் என மொத்தம் 16 மாநிலங்கள், 3 யூனியன் பிரதேசங்களில் மூன்றாம் கட்ட எஸ்ஐஆர் பணி நடைபெற்றது.

இந்தத் திருத்தத்தில் பஞ்சாப் மாநில வரைவு வாக்காளர் பட்டியலில் சுமார் 9.7 சதவிகிதம் அதாவது 20.66 லட்சம் வாக்காளர்களின் பெயர்கள் நீக்கப்பட்டன. அதில், ராகவ் சத்தாவின் பெயரும் இடம்பெற்றிருக்கிறது.இந்த விவகாரம் குறித்து பேசிய ராகவ் சத்தா, "பஞ்சாப் அரசு தன் மீது கடும் கோபத்தில் இருப்பதாகவும், இது அரசியல் பழிவாங்கும் நடவடிக்கை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020